www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination – 2022

FWC

அரசியல் விஞ்ஞானம்
**Political Science**

Three Hours

Gr -12 (2023)

23 | T | I, II

**அறிவுறுத்தல்கள்**

- இவ் வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A பல்தேர்வு வினாக்கள் 20 இணையும் பகுதி B குறுவினாக்கள் 10 இனையும் கொண்டுள்ளன.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகளை உடையது.

## பகுதி A

- **1 தொடக்கம் 07 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) அரசியல் என்பது
(1) பொலிஸ் என்ற கிரேக்க சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதுடன் பிளேட்டோவால் முதலில் பயன்படுத்தப்பட்டது
(2) சமூக மற்றும் ஒழுக்க விழுமியங்களால் வலுவான கட்டுப்பாடுகளுடன் தொடர்படையதாகும்.
(3) அரசுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அரசுக்கு வெளியில் பிரசைகள் பங்குபற்றும் சமூகபயன்பாடு உடையது
(4) சமூக பொருளாதார அரசியல் விவகாரங்களின் மீதான மோத முடியாத கலையாகும்.
(5) பிரச்சினைக்குரிய விவகாரங்களைத் தீர்ப்பதற்கு அதிகார ஆதிக்க வர்க்க நபர்களுடன் மட்டும் தொடர்புடையது

02) அரசியலைக் கற்றல் என்பது
(1) கிரேக்க காலத்தில் முறையாக கற்கத்தொடங்கியதுடன் சமூக விஞ்ஞானத்தின் தலையாய கற்கையாகும்.
(2) அரசியல் முறைமை கொண்டுள்ள பிரச்சினைகளையும் அவற்றுக்கு அரசியல் கட்சிகள் அரசியல் வாதிகள் முன்வைக்கும் தீர்வுகளைப் புறந்தள்ளுவது
(3) அனுபவரீதியான செயன்முறைகைளை நிராகரித்து பண்புசார் தரவுகளையும் நீக்குகின்றது.
(4) காலமாற்றம் மற்றும் சமூக ஒழுங்குக் கட்டமைப்புக்கு இசைவாக மாற்றமடையாத கற்கை நெறியாகும்.
(5) அரசியலில் இடம்பெறும் மோதல் மற்றும் எதிர்ப்பகளை கவனத்தில் கொள்வதில்லை

03) விஞ்ஞான அணுகுமுறை
(1) மெய்ப்பிக்க முடியாத விடயங்கள் சான்றுகள் மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.
(2) சமூக, பொருளாதார மற்றும் அரசியல் என்பவற்றில் செய்யப்படும் ஆய்வுகளில் நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதாகும்.
(3) பிரசைகளின் நடத்தை தொடர்ப்பில் ஆய்வு செய்வதாகும்.
(4) விஞ்ஞான ரீதியான அரசியல் அறிவு ஆய்வாளரின் தனிப்பட்ட முடிவுகளில் விடுபடாததாக இருக்கும்.
(5) சமூகத்தில் ஏனைய அம்சங்களில் தனிமைப்பட்டு இருப்பதல்லாமல் ஏனையவற்றுடன் தொடர்புடைய விடயமாகும்.



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04) அரசியல் கருத்தியல்
(1) அரசியல்சார் விடயங்கள் ஒவ்வொன்றும் வேறுபடாத கருத்துக்களைக் கொண்டது.
(2) சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளின் அரசியல் அறிவு, நம்பிக்கை மற்றும் நோக்குகளை உருவாக்குவதோடு இருக்கும்.
(3) சமூக பிரிவுகளை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான வாயப்பைக் கொண்டிராமை
(4) எப்போதும் சமயக் குழுக்களிடம் இருந்த விசுவாசத்தினை எதிர்பார்க்கும்
(5) சமூகத்தின் அரசியலை விலகிச் செல்லும் கருத்துக்களாகும்.

05) அரசியல் கட்சிகள்
(1) சமூக உயர்குழாமினரின் சிறப்பரிமைகளைப் பாதுகாத்துப் பேனுவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளன ஒழுங்கமைப்பாகும்.
(2) 18ஆம் நூற்றாண்டில் கல்விசார் ஆய்விலும் அரசியல் நிறுவனமாகவும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உறுதிப்படுத்தப்பட்டது.
(3) அரசாங்கக் கொள்கைளுக்கு பொருந்தாத விடயங்களில் அவதானம் செலுத்தும் கொள்கைத் தொகுதியைக் கொண்டிருத்தல்
(4) அரசியல் விளையாட்டின் பிரதான செயற்பாட்டாளராவதுடன் அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துபவர்கள்
(5) பொதுஜன அபிப்பிராயத்தை திரட்டமுடியாத முதன்மையான பிரதிநிதிகளாகும்.

06) பாராளுமன்ற அரசாங்கம் என்பது
(1) பிரதமரும் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை
(2) அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்புத் தத்துவம் என்பது அவசியமானதொரு பண்பு அல்ல
(3) அமைச்சரவையின் தலைவராக அரசின் தலைவர் காணப்படுவார்
(4) நாம மற்றும் உண்மை என்பதை நிறைவேற்றுப் பகுதியூடாக ஒருமைத் தன்மையை வேண்டுகிறது.
(5) அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை உத்தரவாதப்படுத்தும் நிலை காணப்படும்

07) ஜனாதிபதி அரசாங்க முறை என்பது
(1) சமூக பல்தன்மையுடைய நாடுகளுக்கும் சாலச் சிறந்தது.
(2) ஜனநாயக ஆட்சியை பலப்படுத்தி அதிக வினைத்திறன் அற்றது
(3) பிரான்சில் தாபிக்கப்பட்ட ஐந்தாம் குடியரசினூடாக உலகிற்கு அறிமுகமாகியது.
(4) அவசரகால நிலைமைகளில் தாக்கம் செலுத்தாத தன்மையுடையது.
(5) கூட்டுப் பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு என்பதனூடாக செயற்படும்

- **8 தொடக்கம் 15 வரையான வினாக்களில் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

08) கிரேக்க நகர அரசு
A – நிச்சயிக்கப்படாத சிறிய பூமி பிரதேசத்தில் ஒழுங்கமைத்த மக்களைக் கொண்டது.
B – மக்களிடையே அரசு பற்றி உயர்வான உணர்வு காணப்பட்டது.
C – பெண்கள், அடிமைகள், குடியேற்றவாதிகளுக்கு பிரசா உரிமை கிடைக்கவில்லை
D – மக்கள் தொகை மற்றும் ஆள்புலரீதியாக வரையறுக்கப்பட்ட அரசியல் அலகாகும்.
E – ஜனநாயகமும் பிரஜைகளுக்கான அரசியல் செயற்பாடுகளும் முக்கியம் பெறுகின்றது.
(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

09) அரசும் பிரசையும் என்பது
A – கிரேக்க அரசின் செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்குபற்றும் நபர்களாக பிரசைகள் உள்ளனர்.
B - நவீன காலத்தில் பிரஜைகளது பிரதிநிதிகளுடாக பொறுப்பக் கூறும் நிலையும் காணப்படுகிறது.
C – சமூக ஒப்பந்தத்தின்படி பிரசைகளின் இயற்கை உரிமைகளை பாதுகாத்துக் கொடுப்பது அரசு ஆதலாமல் பிரசைகள் அரசுக்கு கீழ்படிய வேண்டும்.
D - ரூசோவின் கருத்துக்கு ஏற்ப அரசு பொது விருப்பமாதலால் பிரசை அரசுக்கு அடிபணிய வேண்டும்.
E - அரிஸ்டோட்டிலின் படி அரசு பிரசைகளுக்கு நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCB

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10) ஒற்றையாட்சி அரசியலமைப்பு

A - மத்திக்கும் பிராந்தியங்களுக்குமிடையில் அதிகாரப்பகிர்வு முறைமையின் அடிப்படையில் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்

B - தேசிய சட்டத்துறை ஒரங்கவாத அடிப்படையில் அமைந்திருக்கின்றமை

C - மத்திய தேசிய அரசாங்கத்தினால் படிநிலை திட்டத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட கீழ் நிலை நிறுவனங்களை இல்லாதொழிக்கும் அதிகார நிறுவனமாக மாற்றுதல்

D - அரசின் இறைமை அதிகாரம் தனியொரு தேசிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருத்தல்

E - அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்தேட்சையாக நிர்வாக பரவலாக்கத்திற்கு உட்படுவதாகும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

11) சமஷ்டி அரசாங்க அரசியலமைப்பு

A - தேசிய, துணை அரசாங்கங்களுக்கிடையில் இறைமை அதிகாரத்தை பங்கிட்டு நடைமுறைப்படுத்தும்

B - பிரதேச பல்வகைத்தன்மைகளுக்கிடையில் ஐக்கியத்தை கலந்துரையாடல்கள் மூலம் உருவாக்கப்படுகிறது.

C - சமஷ்டி முறைமைக்குச் சட்டத் தளத்தை வழங்கும் எழுதப்பட்ட யாப்பு காணப்படுதல்

D - இரு மட்ட அரசாங்கங்களும் ஒன்றின் அதிகாரத்தை மற்றொன்று உடைமையாக்கிக் கொள்ள முடியாது

E - சட்டரீதியாக அல்லது அரசியல் ரீதியாக ஒன்றுக்கொன்று கீழ்படிந்த சமமற்ற பங்காளிகள்

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

12) தாராளவாத கருத்தியல்.

A. ஐரோப்பாவில் நிலமானிய சமூக பொருளாதார சர்வாதிகார அரசாட்சிக்கு எதிராக தோன்றியது.

B. ஜனநாயகம் என்ற பெயரில் சுதந்திரத்தை மட்டுப்படுத்தி திறந்த பொருளாதார முறையை எதிர்க்கின்றது.

C. சமூகத்தின் அனைத்து தனிநபர்களுக்கும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல்.

D. நிபுணத்துவ அறிவையுடைய ஆட்களின் கையில் ஆட்சியை ஒப்படைக்க வாய்ப்பளிக்கின்றது.

E. அரச அதிகாரமானது அரசினுள் ஒழுங்கமைந்துள்ள அனைவரினதும் நலனைக் கருத்தில் கொண்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ABDE (5) ABCE

13) பாசிசவாத கருத்தியலானது

A. அரசானது முழு இனத்தினதும் உயர்வு, கௌரவம் மற்றும் விதி ஆகியவற்றின் வெளிப்பாடு.

B. அதிகாரத்திற்கும், அதிகார நிறுவனங்களுக்கும் மற்றும் தலைவருக்கும் அடிபணிந்து கொள்ளல்.

C. அரசினால் தனியாள் சுதந்திரம் பாதுகாக்கப்படும்.

D. தலைவனின் ஆதிபத்தியத்திற்கு சகல பிரசைகளும் நிபந்தனையின்றி கட்டுப்படல் வேண்டும்.

E. அரசுக்கு உடன்படாதவர்கள் நாட்டை விட்டுச் செல்லல் அல்லது இனச் சுத்திகரிப்புக்கு உட்படல்

(1) ABCE (2) BCDE (3) ACDE (4) ABCE (5) ABDE

14) எளிய முரண்பாடு வகைப்படுத்தல்.

A. ஒவ்வொரு தனிநபரினதும் உள்ளத்தில் ஏற்படுதல்.

B. இரு நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் உருவாகுதல்.

C. சமூகக் குழுக்களுக்கிடையில் உருவாகுதல்.

D. எதிர் மறை மற்றும் அழிவைத் தரக்கூடியவை.

E. இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்படுதல்.

(1) ABCD (2) BCDE (3) ABCE (4) ABDE (5) ACDE

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15) இறைமை என்பது.

A. அரசுக்கு மட்டும் உரித்தான உயர் அதிகாரமாகும்.

B. தன்னிகாற்றதும் வரையறையற்றதுமானது.

C. அரசுக்கு அத்தியாவசியமானது.

D. அரசின் சட்டங்களுக்கு சட்டபூர்வ தன்மையை வழங்குகின்றது.

E. அரசை விட ஏனைய சமூகதாபனங்களை உயர்வாக காண்பிக்கிறது.

(1) ABCD (2) BCDE (3) ABCE (4) ABDE (5) ACDE

❖ **16 தொடக்கம் 20 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் கூற்றுக்களுக்கு பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 16. | அரசியல் கட்சிகளும் ஜனநாயகமும் பிரிக்க முடியாதவைகளாகும். | ஜனநாயகத்தின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகளின் அவசியமாகும். ( ) |
| 17. | ஜனாதிபதி அரசாங்க முறை செயற்திறன் குன்றியதும் ஜனநாயகத்தன்மையானது. | பாராளுமன்ற அரசாங்க முறை உண்மை, நாமம் என்கின்ற நிர்வாகப்பகுதிகளைக் கொண்டது. ( ) |
| 18. | லிபரல் ஜனநாயக அரசு தனிமனிதனதும் பொதுவாக சகல மனிதர்களினதும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. | சர்வதேச சட்டத்தினை ஆதரிப்பதுடன் லிபரல் ஜனநாயகத்தை பாசிச அரசு ஏற்கிறது. ( ) |
| 19. | பொது நோக்கத்திற்காக மக்களால் தாபிக்கப்பட்ட அமைப்புக்களே அமுக்கக் குழுக்களாகும். | அமுக்கக் குழுக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றுகின்றன. ( ) |
| 20. | சமஷ்டி முறையில் சமஷ்டி அலகுகள் மத்திய அரசாங்கத்துக்கு கீழ்ப்பட்டவையாகும். | சமஷ்டி அலகுகளுக்குச் சமமற்ற முறையில் கவனித்தல் சமஷ்டி முறையின் ஒரு பண்பாகும். ( ) |

(20x2= 40 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி B

21. "அரசியல் என்பது புராதன நகர அரசோடு தொடர்புடையது" கிரேக்க கருமத்திலுள்ள இரு அர்த்தங்களும் எவை?

   1) ............................................................................................................

   2) ............................................................................................................

22. தத்துவார்த்த அணுகுமுறையின் அடிப்படைப் பண்புகள் மூன்று உள்ளன அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

   1) ............................................................................................................

   2) ............................................................................................................

   3) ............................................................................................................

23. 1) "எல்லா சமூக அமைப்புகளையும் விட உயர்ந்த சர்வ வல்லமை மிக்க அரசியல் ஒழுங்கமைப்பு"

   2) "அரசின் விருப்பை நிறைவேற்றும் அரசியல் நிறுவனம்"

   மேற்கூறிய கூற்றுக்கள் குறிப்பிடும் நிறுவனங்களது பெயர்களை எழுதுக.

   1) ............................................................................................................

   2) ............................................................................................................

24. அரசும் அரசாங்கமும் ஒன்றுக்குகொன்று வேறுபட்டாலும் அவை ஒழுங்கமைந்துள்ள முறையினை நான்கு கட்டமைப்புகளாக வகைப்படுத்த முடியும் அவற்றில் இரண்டினை உதாரணம் ஒவ்வொன்றுடன் குறிப்பிடுக.

   1) ............................................................................................................

   2) ............................................................................................................

25. "சமூகத்தில் காணப்படும் அரசியல் அதிகாரத்தின் மையம் அரசு ஆகும்" என்பதனை குறிப்பிட்ட இரு அறிஞர்களையும் நூல்களையும் பெயரிடுக.

   1) ............................................................................................................

   2) ............................................................................................................

26. "தாராள ஜனநாயக அரசு" பிரதிநிதித்துவ அரசாங்கம் செயற்படுவதற்கு தேவையான அடிப்படை சிலவற்றைக் கொண்டுள்ளன அவற்றில் இரண்டைக் குறிப்பிடுக.

   1) ............................................................................................................

   2) ............................................................................................................

27. இறைமை என்பது அரசுகளின் ஆணையதிகாரத்தின் மூலதாரமாகக் கருதப்படுகிறது நவீன உலகில் இறைமை அதிகாரத்தின் நடைமுறையானது இரு அரசாங்க மாதிரிகளைப் பெயரிடுக.

   1) ............................................................................................................

   2) ............................................................................................................

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

28. அரசியல் நிறைவேற்றுப் பகுதியை அதன் பதவிக்காலம் முடிவதற்கு முன் பதவியிலிருந்து அகற்றப்படுகிறது பின்வரும் அரசாங்க முறைகளில் யாப்பின் படி ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகளை குறிப்பிடுக.
    1. பாராளுமன்ற அரசாங்கம்
    2. ஜனாதிபதித்துவ அரசாங்கம்

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

29. குடியரசு வாதத்தின் வளர்ச்சியை நான்கு கட்டங்களாக அவதானிக்கப்படுகிறது அவற்றில் இரண்டு கட்டங்களையும் அதில் குறிப்பிடப்படும் அறிஞர்கள் ஒருவரையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

30. ஜோர்ஜ் சீமெல் எழுதிய, லூவிஸ் கோசர் எழுதிய நூல்கள் முரண்பாட்டின் சாதகமான விளைவுகளைக் குறிப்பிடுகிறது அந்நூல்கள் இரண்டும் எவை?

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

(10x2 = 20 புள்ளிகள்)

## வினாப்பத்திரம் II

❖ **இவ்வினாப் பத்திரம் நான்கு வினாக்களைக் கொண்டதாகும். இவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்து விடை தருக.**

01. அரசியலை கல்வியாக கற்றல் எவ்வாறு இடம்பெறுகிறது என்பதை ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. தாராள ஜனநாயக மற்றும் சோசலிச அரச மாதிரிகளுக்கிடையிலான வேறுபாடுகளை ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. 1. அரச என்ற எண்ணக்கருவினை வரையறை செய்க.

(10 புள்ளிகள்)

2. "சமூகத்தில் காணப்படும் அரசியல் அதிகாரத்தின் மையமாக அரசு" என்ற கூற்றின் பொருத்தப்பாட்டை விளக்குக

(10 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

i) பாராளுமன்ற அரசியலமைப்பு

ii) தாராள வாதம்

iii) சமூக ஜனநாயக வாதம்

iv) எளிய வகை முரண்பாடு



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!